(முழுப் பதிப்புரிமையுடையது
(All Rights Reserved)

வளவாளர் - S. மோகன்
0779685514

பிரமி கல்வி நிலையம் பிரமி கல்வி நிலையம் பிரமி கல்வி நிலையம்
தரம் 05
வழிகாட்டல் கருத்தரங்கு
2022

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2022

வினாத்தாள் - I

60 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின்** மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்து ஒப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

www.ikeau.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945


தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk


1. பின்வரும் மூன்று உருக்களில் ஒன்றில் வேறுபாடு உள்ளது. அந்த வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.



(1)





(2)



(3)

2. உரு A ஐ போன்றதொரு உருவினைப் பெறுவதற்கு உரு B யில் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை





(1) 03
(2) 04
(3) 05


3.




இம்மாணவர்களை ஏனைய பாடசாலை மாணவர்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவது


(1) சீருடை
(2) நேரான தோற்றம்
(3) கழுத்துப்பட்டி

4. அடைப்புக்குள் உள்ள உரு நிரையில் அடுத்து இடம்பெற வேண்டிய உரு எது?






(1)



(2)



(3)

www.kcdu.lk

சுட்டெண் : .....

5. ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள மூன்று படங்களுடனும் பொருந்துகின்ற உருவைத் தெரிவு செய்க.





(1) 


(2) 


(3) 

6. அடைப்பினுள் உள்ள வடிவங்கள் மூன்றையும் பயன்படுத்தி அமைக்கப்பட்ட வடிவம் எது?





(1) 


(2) 

(3) 

7. மூன்று உருக்களிலும் இருக்கும் ஏதோவொரு பொதுப்பண்புக்கு ஏற்ப இவற்றில் இரண்டு உருக்களைச் சோடியாக்க முடியும். சோடியாக்க முடியாத உரு எது?

(1) 

(2) 

(3) 

8. கோலத்துக்கு ஏற்ப A , B ஆகிய இடங்களில் வரவேண்டிய எண்கள் முறையே

32	24	08
28	04	20
12	16	04

20	30	40
35	05	15
10	25	05

08	12	10
04	A	06
14	B	02

(1) 02 , 18

(2) 02 , 20

(3) 02 , 16

9. சோடிச் சொற்களின் தொடர்பை உடைய விடையினைத் தெரிவு செய்க.

தாகம் : காதம்

(1) நேரம் : காலம்

(2) காரம் : ராகம்

(3) தானம் : நாதம்

10. சகீர்த்தனா இரண்டு மாம்பழங்களை அறுபது ரூபாவிற்கு வாங்கி மூன்று மாம்பழங்களை நூறு ரூபாவிற்கு விற்றாள். அவள் நாள் ஒன்றில் மாம்பழங்களை விற்றதனால் 300 ரூபாய் இலாபம் பெற்றிருந்தால் அன்று அவள் விற்ற மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

(1) 09 (2) 30 (3) 90

www.kedu.lk

11. நிமிடத்திற்கு 100 மீற்றர் பயணிக்கும் 200 மீற்றர் நீளத்தினை உடைய புகையிரதம் ஒன்று பாலம் ஒன்றைக் கடப்பதற்கு 4 நிமிடங்கள் எடுத்தது எனின் பாலத்தின் நீளம் யாது?

(1) 400 மீற்றர் (2) 300 மீற்றர் (3) 200 மீற்றர்


12. 275 தாள்களையுடைய புத்தகம் ஒன்றில் சுபஸ்திக்கா நடுவில் இருந்த தாளை மடித்து வைத்தாள். அவள் மடித்து வைத்த தாளில் உள்ள பக்க எண்களின் கூட்டுத்தொகை யாது?

(1) 275 (2) 550 (3) 551

13. 1 முதல் 10 வரை எண்கள் எழுதப்பட்ட ஒரே அளவான தனித்தனி அட்டைகள் ஒரு பெட்டியினுள் உள்ளன. அவற்றினைக் குலுக்கி உள்ளே பாராது கேதுவர்ஷன், கனியா, பிருந்தாசினி, ஜிருஷிகா, சிப்னா என்போர் இவ்விரண்டு அட்டைகள் எடுக்கின்றனர். ஒவ்வொருவரும் எடுத்த அட்டைகளில் எழுதி இருந்த எண்களின் மொத்தம் முறையே 17, 16, 11, 7, 4 ஆகும். இதன் படி 10 என்ற எண் எழுதப்பட்ட அட்டையை எடுத்தவர் யார்?

(1) கேதுவர்ஷன் (2) பிருந்தாசினி (3) கனியா

14. கீழே காட்டப்படும் சுவரினை ஒத்த இரு மடங்கு நீளத்தினைக் கொண்ட சுவரினை அமைக்கும் போது ஆகக்குறைந்தது எத்தனை பாதி செங்கற்கள் பயன்படுத்த வேண்டி வரும்?



(1) 08

(2) 04

(3) 10

15. வினாக்குறியுள்ள இடத்திற்குப் பொருத்தமான எண் யாது?

$A + A + A = 30$

$B + B - A = 0$

$6 + B + C = 17$

$A + B + C = ?$

(1) 26

(2) 21

(3) 15

16. நேஜினி, ஹபிஷ்னா, நேஷரா, ஜயிஸ்னா, நியோமிஷாறா ஆகியோர் வரிசையிலே ஒழுங்காக நிற்கின்றார்கள். ஹபிஷ்னாக்கு முன் புறத்தில் ஜயிஸ்னா நிற்கின்றாள். நேஜினிக்குப் பின்புறத்திலே நிற்கும் நேஷராக்குப் பின்புறத்திலே ஜயிஸ்னா நிற்கின்றாள். நியோமிஷாறா வரிசையிலே கடைக்கோடியில் நிற்பினும் அவள் ஹபிஷ்னாவை முந்தி நிற்கின்றாள். இதன்படி வரிசையில் நடுவில் நிற்பவர் யார்?

(1) நேஷரா (2) ஜயிஸ்னா (3) நியோமிஷாறா


17. மனிதன் ஒருவன் சுருட்டுப் புகைப்பதற்காக அதன் அடித்துண்டுகளை சேகரித்தான். அவன் சேகரித்த துண்டுகளின் எண்ணிக்கை 49 ஆகும். ஒவ்வொரு 7 அடித்துண்டுகளையும் கொண்டு அவன் ஒரு சுருட்டுத்தயாரித்துப் புகைக்க முடியுமாயின் 49 துண்டுகளையும் கொண்டு எத்தனை சுருட்டுக்களை அதிகபட்சம் அவனால் தயாரித்து புகைக்க முடியும்?

(1) 07 (2) 08 (3) 09

18. 20 மாணவர்கள் 20 நிமிடத்தில் ஒரு கிலோமீற்றர் தூரம் ஓடுவார்கள். 40 மாணவர்கள் அதே தூரத்தை எத்தனை நிமிடத்தில் ஓடுவார்கள்?

(1) 40 (2) 20 (3) 01

www.lkedu.lk

19. 

தீக்குச்சிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இக் கூட்டல் செய்கை தவறானது. இனை சரி செய்வதற்கு ஒரே ஒரு தீக்குச்சியை இடம் மாற்றி வைத்தால் கூட்டல் செய்கை சரியானதாக மாறும். அந்தவகையில் எந்த இலக்கத்தில் இருந்து எந்த இலக்கத்திற்கு தீக்குச்சியை இடமாற்ற வேண்டும்?

(1) 8 இல் இருந்து 3 இற்கு
(2) 8 இல் இருந்து 0 இற்கு
(3) 8 இல் இருந்து 5 இற்கு

20. அஜோகித்திற்கு 6 மீற்றர் தூரத்திற்கு சீரான இடைவெளியில் நடுவதற்கு 7 தூண்கள் தேவைப்பட்டன. 18 மீற்றர் தூரத்திற்கு அதே சீரான இடைவெளியில் நடுவதற்கு எத்தனை தூண்கள் தேவை?

(1) 21 (2) 18 (3) 19

21. எனது சகோதரன் என்னிலும் பார்க்க குறைவாகப் பணம் வைத்திருக்கின்றான். எனது சகோதரி எனது சகோதரனிலும் பார்க்க கூடுதலாகப் பணம் வைத்திருக்கின்றாள். இதன்படி எவரிடம் கூடுதலான பணம் இருக்கின்றது?

(1) என்னிடம் (2) சகோதரியிடம் (3) கூறமுடியாது

22. அம்ஸி 24 மீற்றர் நீளமுடைய ஒரு தடியை இரு துண்டுகளாக முறித்தாள். ஒரு துண்டு மற்றையதன் நீளத்தின் இருமடங்காகக் காணப்பட்டது. நீளம் கூடிய துண்டின் நீளம் எத்தனை மீற்றர்?

(1) 08 (2) 16 (3) 12

23. அறை ஒன்றின் சுவரின் உயரம் 10 மீற்றரும் நீளம் 12 மீற்றரும் ஆகும். அந்த சுவரில் ஒரு மீற்றர் சதுர வடிவமுள்ள சுவர் ஓடுகள் பதிக்கத் தீர்மானிக்கப்பட்டது. அந்த சுவரில் 5 மீற்றர் நீளமும் 4 மீற்றர் அகலமும் கொண்ட யன்னல் ஒன்று காணப்பட்டது. அந்தச் சுவருக்குப் பதிப்பதற்கு ஆகக் குறைந்தது எத்தனை சுவர் ஓடுகள் தேவைப்படும்?

(1) 120 (2) 100 (3) 80

24. A என்ற நகரத்தில் இருந்து பேருந்து ஒன்று புறப்பட்டபோது பேருந்தில் உள்ள ஆண் பயணிகளின் எண்ணிக்கையானது பேருந்தில் உள்ள பெண் பயணிகளின் எண்ணிக்கையின் இரு மடங்காகும். B என்ற நகரத்திலே 10 ஆண் பயணிகள் இறங்கிச் செல்ல 5 பெண் பயணிகள் ஏறினர். அப்போது அப்பேருந்திலுள்ள ஆண் பயணிகளினதும் பெண் பயணிகளினதும் எண்ணிக்கைகள் ஒன்றுக்கொன்று சமனாகியது எனின் A என்ற நகரத்தில் இருந்து பேருந்து புறப்பட்டபோது பேருந்தில் இருந்த பயணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 55 (2) 45 (3) 30

25. சித்திப்புள்ளி 20 ஆக உள்ள ஒரு பரீட்சைக்கு 5 மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவர்கள் அனைவரும் பரீட்சையில் சித்தியடைந்ததோடு, அவர்கள் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை 105 ஆகவும் காணப்பட்டது. பரீட்சையில் இரு மாணவர்கள் உச்சப்புள்ளியினைப் பெற்று இருந்தனர் எனின், அந்த உச்சப்புள்ளி எதுவாக இருக்கும்?

(1) 23 (2) 22 (3) 24

26. அடைப்பிற்குள் வரும் சொல்லானது முதலாவது சொல்லை முடித்தும் இரண்டாவது சொல்லை ஆரம்பித்தும் வைக்கும். அந்தவகையில் அடைப்பினுள் வரும் சொல்லைத் தெரிவு செய்க.

பாட (.....) ஓரம்


(1) வேளை (2) சாலை (3) நேரம்

www.ikeou.lk

27. சேஸ்ணு தான் நிற்கும் இடத்திலிருந்து 200 மீற்றர் கிழக்கில் ஒரு கலங்கரை விளக்கு இருப்பதைக் கண்டான். அவன் முதலில் வடக்கு நோக்கி 160 மீற்றர் சென்று பின் கிழக்கு நோக்கி 300 மீற்றர் சென்று பின் தனது வலது கைப்பக்கம் கால் வட்டம் திரும்பி 40 மீற்றர் சென்று பின் தனது வலது கைப்பக்கம் கால் வட்டம் திரும்பி 100 மீற்றர் சென்று நின்றான். தற்போது அவன் நிற்கும் இடம் கலங்கரை விளக்கில் இருந்து

(1) தெற்குத்திசையில் 160 மீற்றர் தூரத்தில்
(2) வடக்குத்திசையில் 120 மீற்றர் தூரத்தில்
(3) கிழக்குத்திசையில் 100 மீற்றர் தூரத்தில்


28. நீரின் வெவ்வேறு அளவுகள் உள்ள நான்கு ஒத்த பாத்திரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.



நான்கு பாத்திரங்களிலும் சம அளவு நீர் இருப்பதற்கு பின்பற்றத்தக்க விரைவானதும் புத்திசாதுரியதுமான நடைமுறை


(1) 400 ml வரும் வகையில் A,B ஆகிய பாத்திரங்களில் உள்ள மேலதிக நீரை வெளியில் ஊற்றுதல்.
(2) A பாத்திரத்தில் இருந்து 400 ml நீரை எடுத்து C,D ஆகிய இரு பாத்திரங்களிலும் சம அளவில் ஊற்றுதல்
(3) நான்கு பாத்திரங்களிலும் உள்ள நீரை பெரிய பாத்திரம் ஒன்றில் இட்டு மறுபடியும் நான்கு பாத்திரங்களிலும் சம அளவில் இடுதல்

29. சிறிய சதுரமுகிகள் சிலவற்றை ஒட்டி இந்த உரு அமைக்கப்பட்டுள்ளது. இதனை ஒரு சதுரமுகியாக அமைக்க இன்னும் தேவையான சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கையாக அமையாதது?




(1) 09
(2) 18
(3) 12

30. உரு B இலுள்ள வடிவத்தின் எத்தனை வெவ்வேறு அமைவுகள் உரு A இல் உள்ளன?



உரு - A



உரு - B


(1) 04
(2) 06
(3) 08

31. மோட்டார் வண்டிப்போட்டி ஒன்றில் சில கார்களும் சில மோட்டார் சைக்கிள்களும் கலந்து கொண்டன. பங்கு பற்றிய வாகனங்களின் சில்லுகளின் எண்ணிக்கை 82. சாரதிகளின் எண்ணிக்கை 26 எனவே பங்கு பற்றிய மோட்டார் சைக்கிள்களினதும் கார்களினதும் எண்ணிக்கைகள் முறையே

(1) 15 , 11 (2) 11 , 13 (3) 11 , 15

32. ஒரு பெரிய சதுர வடிவ அட்டைத்தாளில் இருந்து ஒரே அளவுடைய 25 சிறிய சதுரங்கள் வெட்டி எடுக்கப்பட்டன. அவ்வாறு வெட்டி எடுக்கப்பட்ட சிறிய சதுரத்தின் ஒரு பக்க நீளத்தின் எத்தனை மடங்கு பெரிய சதுரத்தின் ஒரு பக்க நீளம் ஆகும்?

(1) 25 (2) 20 (3) 05


33.  இவ்வுருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?


(1) 07


(2) 16

(3) 17

34. ஊடு காட்டக்கூடிய தாளில் வரையப்பட்டுள்ள இரு முகங்களையும் ஒன்றின்மீதொன்று வைக்கும் போது கிடைக்கும் வடிவத்தைத் தெரிவு செய்க.



(1) 


(2) 

(3) 

35. கடை ஒன்றில் 2m , 3m , 4m , 5m , 6m , 7m , 8m , 9m அளவுகளில் மாத்திரம் காற்சட்டைத் துணிகள் உள்ளன. கபிசயனுக்கு காற்சட்டை ஒன்று தைக்க 2m 25cm துணி தேவை. அவன் சிவப்பு, நீலம், கறுப்பு நிறங்களில் காற்சட்டை தைக்க விரும்பினான். அதற்காக அவன் அக்கடையில் வாங்கக் கூடிய துணியின் ஆகக் குறைந்த நீளம் யாது?

(1) 7m (2) 6m 75cm (3) 9m

36. லிநெக்ஷா , கிஷோரி இருவரும் ஒருமுறை வட்டப்பாதையைச் சுற்றிவர 40 நிமிடம் எடுப்பர். படத்தில் உள்ளவாறு உள்ள இடத்தில் இருந்து இருவரும் ஒரே நேரத்தில் ஆரம்பித்து ஒருவரை ஒருவர் நோக்கி நடந்தால் எத்தனை நிமிடத்தில் இருவரும் சந்திப்பர்?



(1) 20

(2) 10

(3) 30

www.kedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK


facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

37. துஸிதன் ஒரு முச்சக்கரவண்டியில் தனது வீட்டில் இருந்து 10 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஒரு நகருக்குச் சென்று வந்தான். 5 கிலோமீற்றர் சென்றதும் வழியில் ஒருவர் அவனுடன் ஏறி அதே நகருக்குச் சென்று பின் திரும்பி வந்து தான் ஏறிய இடத்தில் இறங்கினார். முச்சக்கரவண்டிக்கு பயணக் கட்டணமாக ரூபாய் 300.00 கொடுக்க வேண்டுமாயின் ஏறியவர் பங்காக எவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டும்?


(1) 150.00 (2) 100.00 (3) 75.00

38. தரப்பட்டுள்ள சதுரமுகியின் முகங்கள் ஒவ்வொன்றிலும் காணப்படுகின்ற எண்களின் இருமடங்கு பெறுமதியுடைய எண்கள் அதன் எதிர்முகங்களில் காணப்படுகின்றன. அந்தவகையில் சதுரமுகியின் மறைந்துள்ள முகங்களில் காணப்படும் எண்களின் கூட்டுத்தொகை யாது?



(1) 10 (2) 16 (3) 08


39. கீழே உள்ள இயந்திரத்திற்குள் எண் ஒன்றைச் செலுத்தினால் அது அவ் எண்ணை 2 இனால் பெருக்கி கிடைக்கும் விடையிலிருந்து 1 ஐ கழித்து விடையைத் தரும். இவ் இயந்திரத்தின் மூலம் ரோகித்சன் 43 ஐ விடையாகப் பெறுவதற்கு உட்செலுத்த வேண்டிய எண் யாது?



(1) 44 (2) 12 (3) 22

40. கீழே தரப்படும் உருவை அவதானித்து விடை தருக.

B , C ஆகியவற்றால் குறிப்பிடப்படுபவை முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.



(1) நாய் , பருந்து

(2) புறா , புலி

(3) கிளி , கழுகு

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk || www.lkedu.lk
76667-4945

(முழுப் பதிப்புரிமையுடையது
(All Rights Reserved)

வளவாளர் - S. மோகன்
0779685514

பிரமி கல்வி நிலையம் பிரமி கல்வி நிலையம் பிரமி கல்வி நிலையம்
தரம் 05
வழிகாட்டல் கருத்தரங்கு
2022

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022

வினாத்தாள் - II

01 மணி 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின்** மீது எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன)
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **கோட்டினை மாத்திரம் இடுக.**
* நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்து ஒப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்	 V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	 V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	 V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	 V/I/T/CH

www.pkedu.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

01. பின்வரும் பந்தியை **நன்றாக** வாசியுங்கள்.

"நீரின்றி அமையாது உலகு நல் நூல்கள் இன்றி அமையாது உலகு" என்ற சான்றோரின் கருத்துக்கு அமைவாகச் சிறந்த நூலகமானது உலகினை அறிவார்ந்ததாக மாற்ற வல்லதாகும். நம் அறிவிற்கான மிகப்பெரிய தேடல் வெளியாக நூலகங்கள் காணப்படுகின்றன. நல்ல நிலத்தில் பயிர்கள் செழித்து வளர்வது போல நல்ல நூல்களை நாம் தேடிப்படிக்கும் போது நம் அறிவு வளரும். தனி மனித அறிவு வளரும் போது சமூகமானது தானாகவே வளமானதாக மாற்றம் பெறும். நல்ல நூல்களை வாசிப்பது தியானம் செய்வதற்கு ஈடாகும். இவ்வாறான காரணங்களினால் தான் நம் முன்னோர் "வாசிப்பதனால் மனிதன் பூரணடமடைகின்றான்" என்ற நல் வாசகத்தைக் கூறிச் சென்றுள்ளனர்.

➢ பந்தியைத் துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) உலகினை அறிவார்ந்ததாக மாற்ற வல்லது எது? .....

(ii) நம் அறிவு வளர யாது செய்ய வேண்டும்? .....

.....

(iii) பந்தியில் இடம்பெறும் பெயர் அடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக.....

(iv) பந்தியில் இடம்பெறும் உவமானத்தை எழுதுக. .....

.....

(v) நல்ல நூல்களை வாசிப்பது எதற்கு ஈடாகும்? .....

(vi) மனிதன் எதனால் பூரணமடைகின்றான்? .....

02. உயர்திணை இறந்தகால வினைச்சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) கடவுள் (2) பாடுவார் (3) பேசினார்

03. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்கு படுத்தி கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

கூடி / சிறுவர்கள் / கொண்டிருந்தார்கள் / கடற்கரையில் / விளையாடிக்

.....

04. தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடைப்புக் குறிக்குள் எழுதுக.

(i) தம்பி காலையில் பாடசாலைக்குச் சென்றார்கள். (.....)

(ii) யானைகள் ஆற்றில் குளித்தன. (.....)

(iii) இரவில் நட்சத்திரங்கள் மின்னும். (.....)

(iv) மான் கூட்டம் சிதறி ஓடியன. (.....)

05. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்பது பழமொழியாகும்

www.lkedu.lk

சுட்டெண் : .....

06. (i) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக

நிழலின் அருமை ..... தெரியும்.

(ii) பின்வரும் இணைமொழியைப் பூர்த்தி செய்க.

அன்றும் .....

07. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) எனது நண்பி (நிகழ்த்திய / நிகள்த்திய / நிகல்த்திய) உரை அனைவரையும் கவர்ந்தது.

(ii) வண்டியின் (சிள்ளு / சிழ்லு / சில்லு) உருண்டது.

08. பின்வரும் வாக்கியத்தை நிகழ்காலத்தில் எழுதுக.

யானை ஊருக்குள் புகுந்து வீடுகளை உடைத்தது.

.....

09. பெண்பால் சொல்லை எழுதுக. உழவன் : .....

10. (i) பின்வரும் தொடர்மொழிக்குரிய ஒரு மொழியை எழுதுக.

வைத்தியரின்றித் தாமே தமது நோய்க்குச் செய்து கொள்ளும் மருந்து. : .....

(ii) பின்வரும் சுருக்கக் குறியீட்டின் கருத்தை எழுதுக.

இ.பெ.கூ : .....

(iii) பின்வரும் பிராணியின் இளமைப் பெயரை எழுதுக.

பாம்பு : .....

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

(i) fish : ..... (ii) Language : .....

12. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை **ஆங்கில** எழுத்துக்களிலேயே எழுதுக.

(i) 

(ii) 

....

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) my / This / father / is : .....

(ii) cat / four / My / legs / has : .....


www.ikdu.lk

14. பங்குவ என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக. : .....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

உங்கள் கதிரை எது? : .....

16. எண் சட்டத்தில் வகை குறிக் கப்படும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.



: .....

17. பின்வரும் எண்ணை எழுத்தில் எழுதுக.

56 345 : .....

18. பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.

8706 , 6457 , 8629 , 6574 : ..... , ... , ... , ...

19.

1		13
	7	
19		25

கட்டத்தினுள் உள்ள எல்லா எண்களையும் பயன்படுத்தி பொது வித்தியாசம் 6 ஆகவுள்ள எண்கோலம் ஒன்றை ஆக்கி எழுதுக.


1 , ... , ... , ... , ...

20. ஒரு பாடசாலையில் 1042 பெண்பிள்ளைகளும் 835 ஆண்பிள்ளைகளும் உள்ளனர்.

(i) பாடசாலையிலுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? .....

(ii) இப்பாடசாலையில் உள்ள ஆண்பிள்ளைகளிலும் பார்க்க எத்தனை பெண்பிள்ளைகள் கூடுதலாக உள்ளனர்? .....

21. பின்வரும் உருவில் $\frac{3}{4}$ ஐ (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந்தீட்டுக.



22. 24 மணித்தியாலக் கடிகாரம் 15 : 45 எனக் காட்டும் போது 12 மணித்தியாலக் கடிகாரம் காட்டும் நேரம் யாது? .....

23. 618 இனை 6 இனால் வகுக்கும் போது விடை யாது? .....

www.ikedu.lk

24. பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

பொருள்	வாங்கிய அளவு	ஒரு kg இன் விலை		பெறுமதி	
		ரூபாய்	சதம்	ரூபாய்	சதம்
அரிசி	4kg	185	00	.....	.....
பருப்பு	500g	.....	.....	195	00
மொத்தப்பணம்				.....	.....

25. ஒரு தாங்கியில் 8 லீற்றர் 800 மில்லிலீற்றர் நீரும் வேறொரு தாங்கியில் 7 லீற்றர் 900 மில்லிலீற்றர் நீரும் உள்ளன. இரண்டு தாங்கிகளிலும் உள்ள நீரின் அளவுகளிடையே உள்ள வித்தியாசம் யாது?

..... லீற்றர் ..... மில்லிலீற்றர்

26. பை ஒன்றில் 3 கிலோகிராம் 450 கிராம் அரிசி இருந்தது. அதற்குள் மேலும் 2 கிலோகிராம் 650 கிராம் அரிசி இடப்படுகின்றது. இப்போது பையிலுள்ள அரிசியின் மொத்த நிறை யாது?

..... கிலோகிராம் ..... கிராம்

27. நகரம் A இலிருந்து B வரையுள்ள தூரம் 4 Km 900 m ஆகும். நகரம் B இலிருந்து நகரம் C வரையுள்ள தூரம் 6 Km 500 m ஆகும். நகரம் A இலிருந்து நகரம் B இனூடாக நகரம் C வரை உள்ள மொத்தத் தூரம் யாது?


..... Km ..... m

28. உருவில் காட்டப்பட்டுள்ள திண்மப் பொருளின் பெயரை எழுதுக.



: .....

29. தரம் - 05 வகுப்பிலுள்ள பிள்ளைகள் கொண்டு வந்த காலை உணவு பற்றிய தகவல்கள் வரைவில் காட்டப்பட்டுள்ளன.



(i) வகுப்பிலுள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

(ii) அதிகமாண பிள்ளைகள் கொண்டு வந்த உணவு எது?

.....


- இலக்கம் **30** தொடக்கம் **59** வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் **கோடிடுக.**

30. நோய்க்காவி மூலம் பரவும் நோய் எது?

(1) நீரிழிவு (2) டெங்கு (3) உயர்குருதி அமுக்கம்

www.kedu.lk

31. நீரைச் சுத்திகரிக்கும் செயற்பாட்டின் படம் அருகில் தரப்பட்டுள்ளது. அதில் எழுத்து A யினால் குறிக்கப்படும் பொருளாக அமைவது.




(1) சில்வர் பாத்திரம்

(2) மட்பாத்திரம்

(3) ஊடுகாட்டக்கூடிய பாத்திரம்

32. வேலையை இலகுபடுத்தும் செயற்பாட்டில் A யினால் குறித்துக் காட்டப்படுவது.



(1) கப்பி

(2) பந்து

(3) காந்தம்

33. "எனது உள்ளம் அமைதியுறுவதால் கிடைக்கும் நிம்மதியை உணரட்டும்! எமது நண்பர்களின் உள்ளங்களும் அதனை உணரட்டும்" - இக்கூற்று இடம்பெறுவது.

(1) திடசித்தத்தில் (2) பிரார்த்தனையில் (3) உதிப்பில்

34. "செந்தமிழ் வாழ்வதும் இந்நாடே
சிங்களம் வாழ்வதும் இந்நாடே" இப்பாடல்.

(1) மீனவர் பாடல் (2) தேசப்பற்றுப் பாடல் (3) அரிவு வெட்டுப் பாடல்

35. நாம் நடக்கும் போது முதலில் நிலம் படவேண்டியது.

(1) நுனி விரல்கள் (2) குதிகால் (3) முன்கால்

36. இலவசக் கல்வியின் தந்தை என அழைக்கப்படுபவர்?

(1) ரீ.பி.ஜாயா (2) ஆனந்த குமாரசுவாமி (3) C.W.W.கன்னங்கரா

37. கால்களை உடைய விலங்குகள் மாத்திரம் இடம்பெறும் விடை எது?

(1) சிங்கம், மண்புழு, தாரா (2) நாய், காகம், பாம்பு (3) மான், ஆமை, பல்லி

38. வெளவாலினால் தாவரங்களுக்குக் கிடைக்கும் நன்மை

(1) தாவரங்களில் தலைகீழாகத் தொங்குதல்

(2) பழங்களை உண்டு வித்துக்களைப் பரவச் செய்தல்.

(3) ஒலி எழுப்புதல்.

39. மனிதனின் உணவுக்கு பூவையும் இலையையும் கொடுக்கும் தாவரம் எது?

(1) அத்தி (2) வேம்பு (3) அகத்தி

40. பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் பூச்சிகளை விரட்டுவதற்கு வீட்டுத்தோட்டத்தில் பயிர்களுக்கு இடையில் நடப்படும் தாவரம் எது?

(1) அன்னாசி (2) செவ்வரத்தை (3) செவ்வந்தி

41. மீனிலிருந்து கருவாட்டைத் தயாரிப்பதற்கு தேவையற்றது.

(1) சூரிய ஒளி (2) விறகு (3) ஈரப்பதன்

42. ஞாயிற்றுக் கலங்கள் மூலம் மின்சக்தியைப் பெறும் போது

(1) ஞாயிற்றுக் கலங்களில் இருந்து வெளியேறும் புகை சுழலை மாசுபடுத்தும்.

(2) மனிதர்களுக்கு சுவாச நோய்கள் அதிகரிக்கும்.

(3) சூழல் மாசடைவது குறைவடையும்.

www.lkedu.lk

43. நீராவி பயன்படும் சந்தர்ப்பமாக அமையாதது.
(1) உணவு தயாரிப்பதற்கு (2) சுதேச மருத்துவத்திற்கு (3) தரை ஓடு பதிப்பதற்கு

44. பனிக்கட்டிகளை பெரும்பாலும் பயன்படுத்தும் சந்தர்ப்பமாக அமைவது.
(1) பழவகைகளை நல்ல நிலையில் பாதுகாக்க
(2) தேநீரின் சுவையை அதிகரிக்க
(3) மீனைப் பழுதடையாமல் வைத்திருக்க

45. துவிச்சக்கர வண்டியை இலகுவாக ஓட்டிச் செல்ல பயன்படுவது.
(1) இருக்கையும் தடுப்பும்
(2) தைனமோவும் விளக்கும்
(3) பற்சில்லும் சங்கிலித் தொகுதியும்.

46. தொடர்பாடலில் மனிதனின் வளர்ச்சியைக் காட்டுவது
(1) தீக்குவியல் (2) மின்னஞ்சல் (3) முரசறைதல்

47. சட்டக் காந்தம் இரண்டினை அருகருகே கொண்டு செல்லும் வேளையில் அவதானிக்க முடியாதது?
(1) ஈர்க்கும் (2) தள்ளும் (3) அசையாமல் இருக்கும்

48. சிகிரியா பற்றிய தவறான கூற்று
(1) கிறுக்கல் கவிதைகள் காணப்படுகின்றன.
(2) மத்திய மாகாணத்தில் மாத்தறை மாவட்டத்தில் அமையப் பெற்றுள்ளது.
(3) உலக மரபுரிமையாகக் கணிப்புப் பெற்றுள்ளது.

49. காடு , கடல் , பாலைவனம் போன்றவற்றின் ஊடாகப் பயணம் செய்வோருக்கு பயனுள்ள வகையில் உதவுவது.
(1) காற்றுத் திசைகாட்டி (2) திசைகாட்டி (3) காந்தம்

50. தானியப் பயிர் வகையைச் சேர்ந்த பருப்பினை உணபதனால் கிடைக்கும் நன்மை
(1) உடலுக்குத் தேவையான சக்தியை வழங்கும்.
(2) ஊடலை நோய் நொடியில் இருந்து பாதுகாக்கும்.
(3) ஊடலின் சீரான வளர்ச்சிக்கு உதவும்.

51. ஈற்றுணவாகப் பயன்படுத்த பொருத்தமானது
(1) போஞ்சி (2) வாழைப்பழம் (3) மீன்

52. மனிதனின் தூர நோக்கற்ற செயற்பாட்டினால் ஏற்படக்கூடிய ஓர் அனர்த்தம்.
(1) மின்னல் தாக்கம் (2) வெள்ளப்பெருக்கு (3) சுனாமி

53.



கண்ணாடிக் குவளையினுள் நீல நிறச்சாயம் கலக்கப்பட்ட நீர் உள்ளது. அதனுள் சிறிய பனிக்கட்டி ஒன்றை இட்டு சிறிது நேரத்தின் பின் அவதானித்த போது கண்ணாடிக் குவளையின் வெளிப்புறத்தில் நீர்த்துளிகள் தோன்றின. இதற்கான காரணம் யாதாக இருக்கும்?

(1) குவளையில் இருந்த நீர் கடும் குளிர் காரணமாக வெளியேறிமை.
(2) வளியிலுள்ள நீர் ஒடுங்கியமை.
(3) கடும் வெப்பம் காரணமாக குவளை வியர்த்தமை.

www.kedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu


ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

54. தொழிநுட்ப விருத்தி ஏற்படாத காலத்தில் உணவை நீண்ட காலம் பேண உதவிய பொருள்
(1) பிளாஸ்ரிக் பைக்கற்றுகள் (2) தேன் (3) இரசாயனப் பவுடர்

55. சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள மாவட்டம் ஒன்று
(1) மட்டக்களப்பு (2) கண்டி (3) அம்பாந்தோட்டை

56. வீதிச் சமிக்ஞையில் சிவப்பு நிறம் ஒளிரும் போது.
(1) வாகனங்கள் செல்லலாம்
(2) பாதசாரிகள் பாதையைக் கடக்கலாம்
(3) வாகனங்கள் புறப்படத் தயாராகலாம்

57. ஆங்கில எழுத்து A இனால் குறித்துக் காட்டப்படுவது.
(1) தளவாடி
(2) நீர்ப்பாத்திரம்
(3) திரை



58. இலங்கைக்கே உரித்தான பிராணியாகக் காணப்படுவது
(1) மயில் (2) காட்டுக்கோழி (3) புலி

59. குழாய் நீரைப் பெற்றுக் கொள்வதற்குச் செல்ல வேண்டிய இடம்
(1) நீர்ப்பாசனத் திணைக்களம்
(2) நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை
(3) இலங்கை மின்சார சபை

60. மேற்கு வானில் மலைகளுக்கிடையே தங்கப்பந்து போல சூரியன் மறையும் காட்சி மனதைக் கொள்ளை கொள்ளும் ஒரு காட்சியாகும். " மாலைப் பொழுதின் அழகு" என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்)

(1) .....

.....

(2) .....

.....

(3) .....

.....

www.kedu.lk